**வென்னப்புவ பிரதேச சபை - 2022**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வென்னப்புவ பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் ஏனைய விளக்கத் தகவல்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 172 (1) ஆம் உபபிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கவேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.
இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தைத் தவிர்த்து வென்னப்புவ பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும், காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்க இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட நிருவகிக்கும் தரப்பினர்களின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாகும்.
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16 (1)ஆம் உப பிரிவின் பிரகாரம் நாத்தாண்டிய பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாக பேணுதல் வேண்டும்

### 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடப்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.
- கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கும் போது சபையின் பணிகளை தொடர்ச்சியாக மதிப்பாய்வு செய்வதற்கு இணங்கக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புததகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதா,
- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது சபையின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க சபை செயற்பட்டுள்ளதா,
- தனது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா,
- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா,

## 1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடு தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடு உள்ளடக்கப்பட்டுள்ளது

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(i)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க இவ்வறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் 1.6.1 (இ),(ஈ) மற்றும் 1.6.2(ஆ) அவதானிப்புக்கள் தவிர முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபாரிசுகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**1.6 நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் வேலைகளைப் பூர்த்திசெய்த ரூபா 870,000 பெறுமதி கொண்ட 02 நிர்மாண வேலைகள் மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டிற்கான வருமாத்திலிருந்து மூலதன பங்களிப்புக் கணக்கிற்கு எதிராக சொத்துக்கள் கணக்கிற்கு செம்மையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்குகளில் தேவையான சரிசெய்தல்கள் செய்யப்படுதல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டிற்கான வெட் வரி ஒதுக்கீடு செய்யாமையின் காரணமாக கடன்கொடுத்தோர் ரூபா 1,201,300 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | 2023 ஆம் ஆண்டில் நாட்குறிப்பின் மூலம் கணக்குகளில் செம்மையாக்கி கடன்கொடுத்தோர் சரிசெய்யப்படும். | -மேற்படி- |
| (இ) | 2021 ஆம் ஆண்டின் போது பெறுமதி குறிப்பிடப்படாத 05 காணிகளும் அன்பளிப்பாகக் கிடைத்த 02 காணிகளும் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | உள்ளூராட்சி திணைக்களத்தின் ஆலோசனைக்கு இணங்க சபையின் காணிகள் தொடர்பாக மீண்டும் மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதுடன் அதற்கிணங்க 2023 ஆம் ஆண்டின் போது கணக்குகளுக்கு செம்மையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | -மேற்படி- |
| (ஈ) | 2017 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டு வரை நிதிக்கூற்றுக்களில் பிற்போட்ட அறவிட வேண்டிய மீதிகளாக காட்டப்பட்டிருந்த ரூபா 27,175,869 தொகையினை தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பல ஆண்டுகளாகக் காணப்பட்டு வரும் கணக்கீட்டு தவறுகளை சரியாக இனங்கண்டு 2023 நிதிக்கூற்றுக்களில் தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்கீட்டு தவறுகளையும் பிழைகளையும் இனங்கண்டு தேவையான சரிசெய்தல்கள் செய்யப்படுதல் வேண்டும். |

**1.6.2 கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கை**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதியில் ஊழியர் பிணைக் கணக்கின் மீதி ரூபா 535,618 ஆக இருந்ததுடன் துணைப் பதிவேடுகளின் படி மீதி ரூபா 587,151 ஆக இருந்ததனால் ரூபா 51,533 வித்தியாசமாகும். | 2023 ஆம் ஆண்டின் போது அதனை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பட்டோலையின் மீதியை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 2016 ஆம் ஆண்டிலிருந்து காணப்பட்டுவரும் ரூபா 27,367,484 தொகையான நிர்மாண வேலை கடன்கொடுத்தோர்கள் தீர்த்துவைக்கப்பட்டிருக்கவில்லை. | கொடுப்பனவு செய்யக்கூடிய நிர்மாண வேலைகளுக்காக கொடுப்பனவு செய்வதற்கு அல்லது சபையின் வருமானத்திற்கு எடுத்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கடன்கொடுத்தோர்களை தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபைக்கு | இந்த நிலுவைப் பணத்தை முடியுமான | கிடைக்க வேண்டிய பணத்தை துரிதமாக |

| | | |
|---|---|---|
| கிடைக்கவேண்டிய கணக்கு மீதிகளின் மொத்தம் ரூபா 424,581,241 ஆக இருந்ததுடன் 5 ஆண்டுகளை மிகைத்த ரூபா 2,534,458 மீதியினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அளவுக்கு அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் இன்னும் செயற்பாடற்ற பிரிவிற்கு சட்டரீதியான நடவடிக்கை எடுப்பதற்கு மற்றும் நியாயமான காரணங்களுடன் ஏடுகளிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.6.3 அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| சபையின் 15 முன்பாடசாலைகளின் பிள்ளைகளிடமிருந்து 2022 திசெம்பர் மாதம் வரை சபையின் பெயர் குறிப்பிட்ட பற்றுச்சீட்டின் மூலம் அறவிட்டு வங்கி கணக்குகளில் வைப்புச்செய்யப்பட்ட பணம் ரூபா 6,190,489 ஆகும். இவ்வாறு அறவிடப்பட்ட பணம் பல்வேறு சந்தர்ப்பங்களின் போது சபையின் அங்கீகாரமின்றி செலவு செய்யப்பட்டிருந்ததுடன் எதுவித கணக்கய்விற்கும் உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே மீளாய்வாண்டின் போது சபை நிதியத்திலிருந்து ரூபா 14,894,945 பணமும் முன்பாடசாலைகளுக்காக செலவு செய்யப்பட்டிருந்தது. | 15 முன்பாடசாலைகளுக்குரிய கணக்குகளின் கொடுக்கல் வாங்கல்களை ஒழுங்குபடுத்துவதற்காக முறையான உள்ளகக் கட்டுப்பாட்டு நடைமுறையினை ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அனைத்து வருமானங்களையும் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்துதல் வேண்டும். |

**1.7 இணக்கமின்மைகள்**

**1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள், பிரணமாங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரணமாங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மைகள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 571 | ரூபா 3,874,591 தொகையான காலங்கடந்த வைப்புக்கள் தீர்த்துவைக்கப்பட்டிருக்கவில்லை. | வைப்புக்களை விடுவிப்பதற்கு அல்லது சபையின் வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வைப்புக்ளை தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களுக்கு இணங்க 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையயின் மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 96,054,678 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 94,011,251 ஆகும்.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம | திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலுவை |
| | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| வீத வரியும் வரியும் | 19,610 | 20,037 | 16,005 | 9,531 | 18,595 | 16,930 | 14,338 | 7,352 |
| வாடகை | 36,642 | 31,134 | 28,698 | 3,987 | 39,741 | 25,947 | 25,403 | 5,251 |
| அனுமதிப்பத்திர கட்டணம் | 4,290 | 3,817 | 3,817 | 264 | 4,135 | 3,519 | 3,519 | 508 |
| ஏனைய வருமானம் | 17,823 | 17,703 | 8,782 | 7,360 | 335,078 | 220,684 | 165,839 | 54,845 |
| | ....... | ......... | ......... | ........... | ...... | ......... | ........ | ........... |
| மொத்தம் | 78,365 | 72,691 | 57,302 | 21,142 | 397,279 | 267,080 | 209,099 | 67,956 |
| | ......... | ......., | ........ | ....... | ........ | ....... | ......... | ........... |

#### 2.2.2. வருமானத்தை சேகரிக்கும் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| **(அ) வீதவரி** | | |
| மீளாய்வாண்டின் இறுதியில் வீதவரி நிலுவை ரூபா 9,197,839 ஆக இருந்ததுடன் அந்த நிலுரவயினள் 01 ஆண்டிற்கு மேற்பட்ட 05 ஆண்டுகளுக்கு குறைந்தவை ரூபா 4,395,260 தொகையும் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்டவை ரூபா 1,355,579 தொகையுமாகும். | இந்த நிலுவைப் பணத்தை முடியுமான அளவில் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதுடன் இன்னும் செயற்பாடற்ற இலக்கிற்காக சட்டரீதியான நடவடிக்கை எடுப்பதற்கும் நியாயமான காரணத்துடன் ஏடுகளிலிருந்து நீக்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். | அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நிலுவைகளை துரிதமாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| **(ஆ) ஏக்கர் வரி** | | |
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணி உரிமையாளரிடமிருந்து அறவிட வேண்டிய நிலுவையான ஏக்கர் வரிப்பணம் ரூபா 216,643 ஆக | ஆதனங்களை இனங்காணும் மீளாய்வு நடவடிக்கை மேற்கொண்டு அதற்கிணங்க மேலதிக நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவையான ஏக்கர் வரி வருமானத்தினை துரிதமாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

இருந்ததுடன் அந்த நிலுவைகளிலிருந்து ரூபா 157,021 தொகை 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக அறவிட வேண்டி இருந்தது.

(இ) **வாடகை**

| | | |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை வாடகை ரூபா 3,987,469 ஆகும். அவற்றில் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட நிலுவை வாடகை ரூபா 863,564 தொகையும் 01 ஆண்டிற்கும் 05 ஆண்டுகளுக்கும் இடைப்பட்டவை ரூபா 1,714,104 தொகையுமாகும். | அறவீடு செய்வதற்கு அல்லது அறவீடு செய்ய முடியாத மீதிகள் சம்பந்தமாக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | நிலுவை வர்டகையை துரிதமாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2.3 மிகைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 172(3) ஆம் பிரிவின் பிரகாரம் பொறுப்புக்கூறவேண்டிய நபர்களுக்கு எதிராக உள்ளூராட்சி ஆணையாளரின் (வடமேல்) 2018 பெப்ரவரி 15 ஆந் திகதிய வ.மே உ.தி 02/09/01/01 க.கு 2006 ஆம் இலக்க கடிதத்திற்கு இணங்க ரூபா 326,355 அறவீடு செய்ய வேண்டியிருந்தது. | இரண்டு சந்தர்ப்பங்களின் போது வடமேல் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரிடமிருந்து மற்றும் உரிய எல்லைகள் மூலம் மேல் மாகாணத்தின் பிரதம செயலாளர் ஊடாக மஹவிடயக்கல பணிப்பாளர், மனித வளங்கள் அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவ பயிற்சி நிறுவனத்திற்கு உரிய உத்தியோகத்தருக்கான பிரதியுடன் தெரிவித்து அனுப்பிவைக்கப்பட்டது. | மிகைக் கட்டணத்தை அறவீடு செய்வது சம்பந்தமாக முறையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

# 3. செயற்பாட்டு மீளாய்வு

## 3.1 பயன்படுத்தப்படாத அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| லுனவில பிரதீபா விளையாட்டு மைதானத்தில் நடைபாதை மற்றும் வலையிலான வேலியினை நிர்மாணிக்கம் வேலைகளுக்காக ரூபா 3,729,962 செலவு செய்யப்பட்டிருந்த போதிலும் தற்பொழுது முட் செடிகளும் புற்களும் வளர்ந்திருந்தன. | முறைப்படியாக பராமரித்து பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | விளையாட்டு மைதானத்தினை நாளதுவரையாக பேணுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.2. முகாமைத்துவ செயதிறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) வென்னப்புவ பழைய வர்த்தக கடைத்டதொகுதியில் 6878 சதுர அடி அளவிலான மேல் | எதிர்காலத்தில் மறுசீரமைப்புச செய்து முறைப்படியாக கேள்வி | முறையான நடைமுறைக்கு இணங்க உரிய |

| | | | |
|---|---|---|---|
| | மாடியானது சட்டரீதியாக கேள்வி வழங்கப்படாது 03 வர்த்தக கம்பனிகளுக்கு கட்டணம் அறவிடப்படாது பயன்படுத்துவதற்காக வழங்கப்பட்டிருந்தன. | நடைமுறைகளின் மூலம் குத்தகைக்கு வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | கட்டணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | வென்னப்புவ புதிய பல்நோக்க கட்டிடத்தின் முதலவது மாடியில் 364 சதுர அடி அளவிலான 08 ஆம் இலக்க கடை 2017 மே 17 ஆந் திகதியிலிருந்து குத்தகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாததனால் சபைக்கு கிடைக்க வேண்டிய வருமானம் இழக்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் அதனை குத்தகைக்கு வழங்குவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | சபையின் ஆதனங்களை குத்தகைக்கு வழங்கி வருமானத்தை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | குறைந்த வருமானம் பெறும் 250 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொருட்களை வழங்குவதற்காக மிளாய்வாண்டில் ரூபா 500,000 பணம் செலவு செய்யப்பட்டிருந்ததுடன் உதவி பெறுபவர்கள் குறைந்த வருமானம் பெறுபவர்கள் என பிரதேசத்திலுள்ள கிராம உத்தியோகத்தர்களால் சான்றுபடுத்தப்பட்டிருக்கவில்லை. | பிழைகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | சரியான தகவல்களையும் தேவைப்பாட்டு உறுதிப்படுத்துதல்களையும் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். |

**3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 05 ஆண்டுகளுக்கு ஒரு தடவை வீத வரியினை மறுசீரமைப்புச் செய்ய வேண்டிய போதிலும் 2012 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டின் அடிப்படையில் வரி அறவிடப்பட்டு வருகின்றது. | 2024 ஆம் ஆண்டிலிருந்து அமுல்படுத்துவதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. | நாளதுவரையாக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு இணங்க வருமானத்தை அறவீடு செய்தல் வேண்டும். |
| (ஆ) | 05 ஆண்டுகளுக்கு ஒரு தடவை அதிகாரப் பிரதேசத்தில் மீளாய்வினை மேற்கொண்டு ஏக்கர் வரி அறவிடக்கூடிய காணிகளை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மீளாய்வினை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | ஏக்கர் வரி அறவிடக்கூடிய காணிகளை மீளாய்வின் மூலம் இனங்கண்டு நிர்ணயிக்கப்பட்டவாறு வரி அறவிடப்படுதல் வேண்டும். |

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| சபையின் அதிகாரப் பிரதேசத்தினுள் பொறுப்பேற்கப்படாத 103 ஆதனங்கள் காணப்பட்டதுடன் அவற்றினுள் அலுவலகங்கள், பொது வியாபார | பல காணிகளின் அளவீட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது என | உரிய ஆதனங்களை பொறுப்பேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| சந்தைகள், முன்பள்ளிகள், நூல் நிலையங்கள், சமூக மண்டபங்கள் என்பன காணப்பட்டன. | தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் இக்காணிகளின் முழுமையான உரிமை பிரதேச செயலகத்திடம் உள்ளதனால் அவர்களின் செயற்பாட்டின் மீது தங்கியுள்ளது. | |

**3.5 ஒப்பந்த நிர்வாகத்திலுள்ள குறைபாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) நேரடி வேலையாட்களை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட 33 பராமரிப்பு வேலைகள் மதிப்பீட்டினைத் தயாரிக்காது நிறைவேற்றப்பட்டிருந்ததுடன் மதிப்பீடின்றி பராமரிப்பு நடவடிக்கைகளுக்காக ரூபா 1,241,172 தொகையான பொருட்கள் இருப்பு பதிவேட்டிலிருந்து நீக்கப்பட்டிருந்தது. | இந்த வேலைகளில் 06 வீதிகள் ABC மாத்திரம் ஈடுபடுத்தப்பட்டு தயாரிக்கப்பட்டிருந்ததுடன் அந்த வேலைகளுக்கு பொருட்களை ஈடுபடுத்துதலானது "வீதிகளின் குழிகளுக்கு ABC பரப்பி திருத்தம் செய்தல்" என்பதாகும். 13 வீதிகளின் பொருட்களை ஈடுபடுத்துதலானது பதிவேட்டில் பதியப்பட்டிருந்தும் அதில் குறிப்பிட்ட பெயருக்கும் மதிப்பீட்டில் குறிப்பிட்ட பெயருக்குமிடையே வித்தியாசம் காணப்படுகின்றது. மிகுதியான இந்த 14 வீதிகளுக்காக மதிப்பீடு மற்றும் கொடுப்பனவு அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. | மதிப்பீட்டினைத் தயாரித்து வேலைகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) மீளாய்வாண்டின் போது 15 வீதிகளுக்காக மதிப்பீட்டினைத் தயாரித்த போதிலும் அவற்றின் பராமரிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதா என்பதனை வெளிப்படுத்திக்கொள்ள முடியாதிருந்தது. | இந்த 15 வீதிகளுக்காக பொருட்களை ஈடுபடுத்துதல் பதிவேட்டில் பதியப்பட்டிருந்தும் அதில் குறிப்பிட்ட பெயருக்கும் மதிப்பீட்டில் குறிப்பிட்ட பெயருக்குமிடையே வித்தியாசம் காணப்படுகின்றது. | பராமரிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது என்பது உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும். |
| (இ) 2022 ஆம் ஆண்டில் பராமரிப்பு பிரிவின் களஞ்சிய கணக்குகள் பேரேட்டிற்கு இணங்க சிப்ஸ் கல் பெறுவனவுகளாக பதியப்பட்டிருந்ததானது 74 கியூப் சிப்ஸ் மாத்திரமாகும். அதற்கிணங்க கொள்வனவு செய்யப்பட்ட 110 கியூப்களும் 2021 ஆம் ஆண்டிலிருந்து முன்கொண்டுவரப்பட்டிருந்த 20 கியூப்களையும் உள்ளடக்கிய 130 கியூப்களில் 74 கியூப்கள் ஆவணப்படுத்தப்பட்டதன் காரணமாக ரூபா 719,600 பெறுமதியான 56 கியூப்கள் ஆவணப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 2022 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்டுள்ள அனைத்து சிப் கற்களின் கியூப் அளவுகள் பிரீமிக்ஸ் பிரிவின் "வீதிப் பராமரிப்பு பிரிவிற்காக பொருட்களை ஈடுபடுத்துதல்" பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டுள்ளது. எனினும் களஞ்சிய பேரேட்டில் உள்ளடக்கப்பட்டுள்ள திகதிக்கு முன்னர் பிரீமிக்ஸ் பிரிவிற்கு சிப்ஸ் கற்கள் கிடைத்திருந்ததனாலும் அத்திகதிகளில் நாளாந்தம் வீதி பராமரிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதனாலும் அப்பொருட்களை பயன்படுத்த வேண்டி ஏற்பட்டது. | பெறுவனவுகளையும் வழங்குதல்களையும் முறைப்படியாக ஆவணப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | 2021 ஆம் ஆண்டிலிருந்து முன்கொண்டுவரப்பட்ட கோலாஸ் பெரல்களின் 15 ஆக இருந்ததுடன் ஆண்டின் போது கொள்வனவு செய்த அளவு 150 ஆகும். அதற்கிணங்க முழுமையான அளவு 165 ஆகும். எனினும் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருந்தது 90 பெரல்கள் என்பதனால் ரூபா 2,088,750 பெறுமதியான 75 பெரல் இருப்பு களஞ்சிய பதிவேட்டிற்கு இணங்க கிடைத்திருக்கவில்லை. | களஞ்சியத்திற்கு கொண்டுவரப்பட்ட திகதிக்கு முன்னர் பிரீமிக்ஸ் பிரிவிற்கு C.R.S.I பெரல்கள் கிடைத்திருந்ததனால் மேலும் அத்திகதிகளில் நாளாந்தம் வீதிகளை பராமரிக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதனால் அப்பொருட்களை பயன்படுத்த வேண்டியிருந்ததனால் பரீமிக்ஸ் பிரிவின் “வீதிகளை பராமரிக்கும் பிரிவிற்காக பொருட்களை ஈடுபடுத்துதல்” பதிவேட்டில் பிரீமிக்ஸ் பிரிவிற்கு C.R.S.I பெரல்கள் கிடைத்த திகதியிலேயே உள்ளடக்கப்பட்டுள்ளது. | பெறுவனவுகளையும் வழங்குதல்களையும் முறைப்படியாக ஆவணப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | கிழக்கு கஹவில இலக்கம் 02, மகயாயவத்த குடியிருப்பிற்கு மத்தியில் சமூக மண்டபத்தினை நிர்மாணிப்பதற்காக அத்திவாரம் இடுவதற்கு ஒப்பந்தக்காரருக்கு ரூபா 449,975 செலுத்தப்பட்டிருந்தது. ஒன்றரை ஆண்டுகள் காலமாக வெளிச் சுற்றுப்புறத்தில் மூடப்படாது வைக்கப்பட்டிருந்த கம்பிகள் அதிக அளவில் துருப்பிடித்தலுக்கு உள்ளாகியிருந்தது. | இதன் மிகுதி நடவடிக்கைகளானது நிதி ஏற்பாடு இல்லாமையால் நிறுத்தப்பட்டுள்ளது. | சமூக மண்டபத்தின் நிர்மாண நடவடிக்கைகளை துரிதமாக நிறைவேற்றுதல் வேண்டும். |
| (ஊ) | செந்திரியாமுல்ல சேதனப் பசளை வேலைத்தளத்தை நிர்மாணிக்கும் வேலைகளுக்காக ரூபா 23,092,195 தொகைக்கு உடன்படிக்கை செய்யப்பட்டிருந்த போதிலும் வேலைகள் பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை. 2022 செப்தெம்பர் 30 ஆந் திகதி வரை அதன் பௌதீக செயல்முன்னேற்றம் 31.75 சதவீதமாக இருந்ததுடன் நிறைவேற்றப்பட்ட வேலைகளின் பெறுமதி ரூபா 8,639,214 ஆகும். ஒப்பந்தக்காரருக்கு 2022 ஒக்தோபர் 28 ஆந் திகதி வரை ரூபா 5,381,285 செலுத்தப்பட்டிரந்ததுடன் இச்செயற்திட்டத்தின் வேலைகள் நிறுத்தப்பட்டுள்ளது என 2022 ஒக்தோபர் 28 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரீட்சிப்பின் போது அவதானிக்கப்பட்டது. | செந்திரியாமுல்ல புதிய சேதனப் பசளை வேலைத் தளத்தினை நிர்மாணித்தல் தற்பொழுது முடிவடையும் கட்டத்தில் காணப்படுவதனால் இந்த ஆண்டின் போது கட்டிடத்தினை பயன்பாட்டிற்கு எடுத்துக் கொள்ளலாம். | நிர்மாண நடவடிக்கைகளை துரிதமாக பூர்த்திசெய்ய வேண்டியதுடன் காணியினை சபைக்கு பொறுப்பேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.6 மனித வளங்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| சபையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் (விசேடம்) பதவி பல ஆண்டுகளாக வெற்றிடமாகக் காணப்பட்டதுடன் 03 இரண்டாம் மட்ட பதவிகளும் 08 ஆரம்ப மட்ட பதவிகளும் வெற்றிடமாகக் காணப்பட்டன. | உள்ளூராட்சித் திணைக்களத்திற்கு எழுத்துமூலம் தெரியப்படுத்தி வேண்டுகோள் விடுக்கப்பட்டள்ளது. | வெற்றிடங்களை முறைப்படியாக நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.7 வாகனப் பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| இரண்டு உழவு இயந்திரங்களை முறைப்படியான மதிப்பீட்டின் கீழ் கைதவிர்ப்புச் செய்வதற்கு சிபாரிசு செய்யப்பட்டிருந்தும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மதிப்பீட்டு அறிக்கை கிடைத்ததன் பின்னர் மேலே குறிப்பிட்ட இரண்டு உழவு இயந்திரங்களையும் கைதவிர்ப்பச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மதிப்பீட்டு அறிக்கையினை துரிதமாகப் பெற்று கைதவிர்ப்பச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாட்சியும்.

### 4.1 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| செயல்நடவடிக்கைத் திட்டத்தில் காட்டப்பட்டுள்ள 10 பல்வேறு செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக ரூபா 1,302,945 பணம் செலவு செய்யப்பட்டிருந்தும் எதிர்பார்த்த பூர்த்தியாக்கல் மட்டம் அடைந்துகொள்ளப்படவில்லை. | அதன் போது அரசியல் பொருளாதார மற்றும் சமூக விடயங்களும் எரிபொருள் கொரோனா சிக்கல் நிலைமையும் இவற்றிற்கு மத்தியில் அதிக அளவில் தாக்கமளித்துள்ளது. | வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| நி.பி 133(1) இற்கு இணங்க உள்ளகக் கணக்காய்வானது நிறுவனத்தின் செயற்பாட்டு நடைமுறைகளை மேம்படுத்துதல் மற்றும் செயலாற்றலினை அதிகரிப்பதற்காக உதவியளிக்கும் ஒரு நடைமுறையாகும். எனினும் பிரதேச சபையின் உள்ளகக் கணக்காய்வினால் மூலதனச் செலவு தொடர்பாக கணக்காய்வு சௌய்யப்பட்டிருக்காததுடன் வருகைப் பதிவேடு தரவு முறைமை, வங்கியில் பணத்தை வைப்புச் செய்தல் என்பன மாத்திரம் உள்ளடக்கப்பட்டிருந்தன. | எதிர்காலத்தில் அமுல்ப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அனைத்து பிரிவுகளையும் உள்ளடக்கும் வகையில் உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்தினை அமுல்ப்படுத்துதல் வேண்டும். |

### 4.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 28 செலவுத் தலைப்புக்கள் தொடர்பாக ரூபா 5,500,000 பெறுமதியானது பாதீட்டின் மூலம் நிதி எற்பாடு செய்யப்பட்டிருந்தும் மீளாய்வாண்டில் அந்த நிதி ஏற்பாடு முழுவதும் பாதீடு செய்யப்பட்ட செயற்பாடுகளை அடைந்துகொள்வதற்காக எந்த வகையிலும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | மீண்டு வரும் மற்றும் மூலதன நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்ப்படுத்தும் வாய்ப்புக்கள் கிடைக்கவில்லை. பல சந்தர்ப்பங்களில் அத்தியவசியமான செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு போதியளவு நிதி ஏற்பாடு இல்லாத சந்தர்ப்பங்களில் காணப்படும் நிதி ஏற்பாடுகளிலிருந்து செலவு மாற்றம் மேற்கொள்ளப்பட்டு அச்செயற்பாடுகளை நிறைவேற்றவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. | பாதீடு செய்யப்பட்ட செயற்பாடுகளை அடைந்துகொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |